1973 ஆகஸ்ட் 13]

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, கூடுதல் நடுவர்களை நியமித்து, இந்த வழக்குகள் 1968, 1969-லிருந்தே ஆரம்பமாகியிருப்பதால், இந்த வழக்குகளை பைசல் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போதே வேகமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதனால் கூடுதலாக நடுவர்களை நியமிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏற்கெனவே சென்னையிலே வழக்குகள் மிகவும் குறைந்துவிட்ட காரணத்தினால் நாம் திருச்சியிலே உள்ள நடுவர் மன்றத்தை மாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், 1969-ல் ஆரம்பிக்கப்பட்ட வழக்குகள் இன்னும் எத்தனை பெண்டிங்கில் இருக்கின்றன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 1969-ல் 19, 1970-ல் 19.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, என்னென்ன காரணங்களுக்காக இந்த அதிகாரிகள்மீது வழக்குகள் போடப்பட்டன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதிகாரிகள்மீது என்னென்ன காரணங்களுக்காக வழக்குகள் போடுவார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரிந்தது தான்.

Disbursement of Provident Fund accumulations

* 100 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Chief Minister be pleased to state the number of pending applications of retired Non-Gazetted Officers in Tamil Nadu for disbursement of their Provident Fund accumulations for more than six months?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 28—2—73 அன்றுள்ளபடி, 15 விண்ணப்பங்கள் மட்டுமே ஆறு திங்களுக்கு மேலாக முடிவு செய்யப்படாமல் உள்ளன என்று சென்னை மாநிலக் கணக்காய்வுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

[1973 ஆகஸ்ட் 13

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, இந்த 15 வழக்குகள் கூட அவர்கள் சர்வீசில் இருக்கும்போது, அவர்களுடைய சேமிப்புக் கணக்குப் பற்றிய சரியான விவரங்கள் கொடுக்காததால் தான் பெண்டிங்கில் இருப்பதாகச் சொல்லப்படுவது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, மொத்தம் வந்துள்ள 4,500-க்கு மேற்பட்ட விண்ணப்பங்களில் இன்னும் முடிவு செய்யப்படாமல் இருக்கும் விண்ணப்பங்கள் 15 தான். முடிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் இந்த 15 விண்ணப்பங்கள் என்பது மிகவும் குறைவானதாகும். இதையும் தவிர்ப்பதற்காக 8—5—1972-ல் அரசு ஒரு உத்தரவு பிறப்பித்து, இந்த விதிமுறைகளைச் சுருக்கியும் சுலபமாக்கியும் இருக்கிறது. திரு. வீராசாமி அவர்கள் குறிப்பிட்டதைப்போல இந்த 15 விண்ணப்பங்களும் முடிவு செய்யப்படாமல் இருப்பதற்குக் காரணம் அவர்களுடைய சேமிப்புக் கணக்கு விபரங்கள் சரிவரக் கொடுக்காததால்தான்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்த பிராவிடன்ட் பணம் முழுவதும் கொடுக்கப்படுவதில்லை என்று புகார் வந்திருக்கிறது. முழுப் பணமும் கொடுக்காமல் முதலில் பாதி கொடுக்கிறார்கள். மீதியுள்ள பாதிப் பணம் வேண்டுமென்று கேட்டு, 2 ஆண்டு 3 ஆண்டு காலமாகியும் கொடுக்கப்படாமல் இருக்கிறது. அதையும் உடனடியாகக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அப்படி எந்தத் தகவலும் இல்லை. ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல 4,500-க்கு மேற்பட்ட விண்ணப்பங்களில் 15 விண்ணப்பங்கள் தான் இன்னும் முடிவு செய்யப்படாமல் இருக்கின்றன. ஏதாவது தகராறுகள் இருந்தால், பாதிப் பணம்தான் கொடுக்கிறார்கள் என்று புகார் வந்தால் அரசு நிச்சயம் கவனிக்கும்.

THIRU K. S. KOHANDARAMIAH: May I know from the Chief Minister whether there are applications from the retired teachers whose amounts have not been returned?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அந்த 15-ல் அவர்கள் எவ்வளவு பேர்கள் என்பது தெரியாது.